| சாட்சி : PW2<br>மோகன் | EP.11/22 in OS.236/18 | 05.01.2024 |
|---|---|---|

**<u>PW2 – முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

புல எண். 32 ஆனது 1997 ம் வருடம் நத்தம் மனை பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டது. அதில் மனுவில் கண்ட நத்தம் புல எண்.304/20 ஆக வகைப்படுத்ததப்பட்டு 2008 ம் ஆண்டு மருதை உடையார் மகன் பிச்சை, கொடுத்த மனுவின் பேரில் உட்பிரிவு செய்யப்பட்டது. புல எண்.304/20 ஆனது 350 சதுரமீட்டர் ஆகும். அதை பொறுத்து வருவாய் வட்டாட்சியர் பிறப்பித்த கோப்பு எண் ஆனது 8A/126/08 ஆகும். மேற்படி உத்தரவிலேயே சரவணன், சுவாமிநாதன் ஆகியோர் புல எண்.304/13 மற்றும் 71/1 ல் பொறுத்து கொடுத்த உட்பிரிவுகளும் சேர்த்து உத்தரவு செய்யப்பட்டது. புல எண்.304/20 யை பொறுத்து பிச்சை தனது மனுவில் என்னென்ன ஆவணங்கள் கொடுத்துள்ளார் என்றால் கணக்கப்புடையார் பெயரில் உள்ள பத்திரம் மட்டும் கொடுத்துள்ளார். கணக்கபுபடையார் பெயரில் உள்ள சொத்தின் சர்வே எண்.32 அல்ல என்றால் அதன் பழைய புல எண். 398/1 ஆகும். அதன் நான்கெல்லையானது கிழமேல் வீதிக்கு கிழக்கு மற்றும் தெற்கு தென்வடல் வீதிக்கு கிழக்கு, பொது சந்துக்கு வடக்கு, இதற்குட்பட்ட பகுதி என்றும் கண்டுள்ளது என்றால் சரிதான். எங்களது நடவடிக்கை பொறுத்து அருகில் உள்ள நிலத்துகாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. தென்புறம் பொது சந்துக்கும் வடக்கு, கிழமேல் வீதிக்கு தெற்கு, தென்வடல் வீதிக்கு கிழக்கு, கருப்புடையார் மனைக்கு மேற்கு இதற்குட்பட்ட கிழமேல் லிங்ஸ் 48, தென்வடல் லிங்ஸ் 47 சுமார் 3 செண்ட் காலிமனை என எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட 27.01.1975 ம் தேதிய கிரைய ஆவணத்தில்

நான்கெல்லையில் கண்டுள்ளது. 1 லிங்ஸ் என்பது 0.66 மி.மீட்டர். 47 லிங்ஸ் என்பது 31.2 அடி. மேற்படி கிரைய ஆவணத்தில் கண்ட நான்கெல்லையானது புல எண்.304/20C யை பொறுத்து ஒத்து போகவில்லை. 304/20C ல் கண்ட தென்வடல் அளவானது 10.6 மீட்டர் என புலவரைபடத்தில் மேற்குபுற அளவில் குறிக்கப்பட்டுள்ளது. 10.6 மீட்டர் என்பது 35.2 அடி. எதன் அடிப்படையில் 35.2 அடி என குறிக்கப்பட்டதற்கான நடவடிக்கைகள் எனது ஆவணத்தில் இல்லை என்றால் அனுபவத்தின் அடிப்படையில் குறிக்கப்பட்டுள்ளது. 304/20C ல் கண்ட அளவுகள் தவறு என்றும், மேற்படி கூடுதலான 4 அடி தென்வடல் அளவானது புல எண்.304/20பி ல் தான் பிச்சை கொடுத்த மனுவின் படி பாதையில் சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 2008 ல் எங்கள் அலுவலகத்தில் அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்காமல் உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்றால் சரியல்ல. ந.க.எண்.8A/126/08 ற்கான 124 பக்கங்கள் கொண்ட நடவடிக்கையின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பாரதிராஜா என்பவர் கொடுத்த மனுவின் பேரில் பட்டா மாறுதல் உத்தரவு TK/3191/2020 ற்கான சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாரதிராஜா என்பவர் 432 சதுரடிக்கு தான் பட்டா கேட்டு மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் பேரில் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. பாரதிராஜா கேட்டதன்படி பரிகாரம் வழங்கப்படவில்லை என்றால் தனிப்பட்டா கேட்டு மனு கொடுக்கவில்லை சலானும் செலுத்தவில்லை. பட்டா மாறுதல் கேட்டு தான் மனு செய்தார். கூட்டுப்பட்டாவில் பெயர் சேர்ப்பதற்கு அறிவிப்பு வழங்கப்படவில்லை என்றால் பட்டா மாறுதல் செய்வதற்கு அறிவிப்பு அனுப்பமாட்டோம்.

வருவாய் நிலை ஆணையின்படி பட்டாவில் எந்த மாற்றம் செய்தாலும் அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்றும், நான் பொய்யாக அறிவிப்பு அனுப்ப தேவையில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. புலஎண்.304/20 பில் சேகர் மனைவி சாந்தி என்பவர் தன்னை சேர்க்க கோரி மனு செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் 432 சதுரடி பாதையை பொறுத்து தான் கேட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அவரது மனுவில் வாரிசு அடிப்படையில் பட்டா மாறுதல் செய்ய கோரி தான் மனு செய்துள்ளார். சாந்தி கொடுத்த மனுவின் பேரில் போடப்பட்ட உத்தரவு TK/3320/2022 ஆனது **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.09.2002 ந் தேதி செட்டில்மெண்ட் ஆவணப்படி புல எண்.304/20 பில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதே ஆவணத்தின் சொத்தை தான் சா.சா.ஆ.2 ல் கண்ட நடவடிக்கையின் படி புல எண்.304/20 A என பட்டா மாற்றம் செய்துள்ளார்கள் என்றால் சா.சா.ஆ.2 ஆனது ஆவணத்தின் அடிப்படையிலும் சா.சா.ஆ.3 ஆனது வாரிசு அடிப்படையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் இரண்டும் ஒரே ஆவணங்கள் என்றும் ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் பெயர் பதிவுகளும், உட்பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 10.01.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.